# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### இரண்டாம் காண்டம்

# 10 கடல் சூழ்ந்த சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------

Periya puranam text



| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
|---|---|---|---|
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa | மும்மையால் | PDF |

| | | | |
|---|---|---|---|
| | carukkam | உலகாண்ட சருக்கம் | |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |

10 கடல் சூழ்ந்த சருக்கம்

53 கழற்சிங்க நாயனார் புராணம்

1. படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார் 4096-1
கடிமதில் மூன்றும் செற்ற கங்கைவார் சடையார் செய்ய 4096-2
அடிமலர் அன்றி வேறு ஒன்று அறிவினில் குறியா நீர்மைக் 4096-3
கொடி நெடும் தானை மன்னர் கோக் கழற்சிங்கர் என்பார் 4096-4

2. கடவார் குரிகில் ஆர் ஆங் கழல் பெரும் சிங்கனார் தாம் 4097-1
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரில் சென்று 4097-2
கூடலர் முனைகள் சாய வடபுலம் கவர்ந்து கொண்டு 4097-3
நாடு அற நெறியில் வைக நல் நெறி வளர்க்கும் நாளில் 4097-4

3. குவலயத்து அரனார் மேவும் கோயில்கள் பலவும் சென்று 4098-1
தவல் அரும் அன்பில் தாழ்ந்து தக்க மெய்த் தொண்டு செய்வார் 4098-2
சிவபுரி என்ன மன்னும் தென் திருவாரூர் எய்திப் 4098-3
பவம் அறுத்து ஆள் கொள் வார்தம் கோயில் உள் பணிய புக்கார் 4098-4

4. அரசியல் ஆயத் தோடும் அங்கணர் கோயில் உள்ளால் 4099-1
முரசு உடைத்தானை மன்னர் முதல்வரை வணங்கும் போதில் 4099-2

விரை செறிமலர் மென் கூந்தல் உரிமை மெல் இயலார் தம் உள் 4099-3
உரை சிறந்து உயர்ந்த பட்டத்து ஒருதனித் தேவி மேவி 4099-4

5. கோயிலை வலம் கொண்டு அம் கண் குலவிய பெருமை எல்லாம் 4100-1
சாயல் மா மயிலே போல் வாள் தனித் தனி கண்டு வந்து 4100-2
தூய மென் பள்ளித் தாமம் தொடுக்கும் மண்டபத்தின் பாங்கர் 4100-3
மேயது ஓர் புதுப்பூ அங்கு விழுந்தது ஒன்று எடுத்து மோந்தாள் 4100-4

6. புதுமலர் மோந்த போதில் செருத்துணைப் புனிதத் தொண்டர் 4101-1
இதுமலர் திருமுற்றத்துள் எடுத்து மோந்தனள் ஆம் என்று 4101-2
கதும் என ஓடிச்சென்று கருவி கைக் கொண்டு பற்றி 4101-3
மதுமலர் திருஒப்பாள் தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார் 4101-4

7. வார்ந்து இழி குருதி சோர மலர்க் கரும் குழலும் சோரச் 4102-1
சோர்ந்து வீழ்ந்து அரற்றும் தோகை மயில் எனத் துளங்கி மண்ணில் 4102-2
சேர்ந்து அயர்ந்து உரிமைத் தேவி புலம்பிடச் செம்பொன் புற்றுள் 4102-3
ஆர்ந்த பேர் ஒளியைக் கும்பிட்டு அரசரும் அணைய வந்தார் 4102-4

8. வந்து அணை உற்ற மன்னர் மலர்ந்த கற்பகத்தின் வாசப் 4103-1
பைந்தளிர்ப் பூம் கொம்பு ஒன்று பார்மிசை வீழ்ந்தது என்ன 4103-2
நொந்து அழிந்து அரற்றுவாளை நோக்கி இவ் அண்டத்து உள்ளோர் 4103-3
இந்த வெவ்வினை அஞ்சாதே ஆர் செய்தார் என்னும் எல்லை 4103-4

9. அந்நிலை அணைய வந்து செருத்துணை யார் ஆம் அன்பர் 4104-1
முன் உறு நிலைமை அங்குப் புகுந்தது மொழிந்தபோது 4104-2
மன்னரும் அவரை நோக்கி மற்று இதற்குத் தண்டம் 4104-3
தன்னை அவ் அடைவே அன்றோ தடந்திடத் தகுவது என்று 4104-4

10. கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத் 4105-1
தொட்டு முன் எடுத்த கை ஆம் முன்படத் துணிப்பது என்று 4105-2
பட்டமும் அணிந்து காதல் பயில் பெரும் தேவி ஆன 4105-3
மட்டு அவிழ் குழலாள் செம்கை வளை ஒடும் துணித்தார் அன்றே 4105-4

11. ஒரு தனித் தேவி செம்கை உடைவாளால் துணித்த போது 4106-1
பெருகிய தொண்டர் ஆர்ப்பின் பிறங்குஒலி புலி மேல் பொங்க 4106-2
இரு விசும்பு அடைய ஓங்கும் இமையவர் ஆர்ப்பும் விம்மி 4106-3
மருவிய தெய்வ வாச மலர் மழை பொழிந்தது அன்றே 4106-4

12. அரிய அத் திருத் தொண்டு ஆற்றும் அரசனார் அளவில் காலம் 4107-1
மருவிய உரிமை தாங்கி மால் அயன் அரியார் மன்னும் 4107-2
திரு அருள் சிறப்பினாலே செய்ய சே அடியின் நீழல் 4107-3
பெருகிய உரிமை ஆகும் பேர் அருள் எய்தினார் ஏ 4107-4

13. வையகம் நிகழ்க் காதல் மாதேவி தனது செய்ய 4108-1
கையினைத் தடிந்த சிங்கர் கழல் இணை தொழுது போற்றி 4108-2
எய்திய பெருமை அன்பர் இடம் கழியார் என்று ஏத்தும் 4108-3
மெய் அருள் உடைய தொண்டர் செய்வினை விளம்பல் உற்று ஆம் 4108-4

## 54 இடங்கழி நாயனார் புராணம்

1. எழும் திரை மா கடல் ஆடை இரு நிலமா மகள் மார்பில் 4109-1
அழுந்து பட எழுதும் இலைத் தொழில் தொய்யில் அணியினவாம் 4109-2
செழும் தளிரின் புடை மறைந்த பெடை களிப்பத் தேமாவின் 4109-3
கொழும் துணர் கோதிக் கொண்டு குயில் நாடு கோனாநாடு 4109-4

2. முருகூறு செம் கமல மதுமலர் துதைந்த மொய் அளிகள் 4110-1
பருகுறு தெண் திரை வாவிப் பயில் பெடையோடு இரை அருந்தி 4110-2
வருகுறு தண் துளி வாடை மறைய மாதவிச் சூழல் 4110-3

குருகு உறங்கும் கோன் நாட்டுக் கொடி நகரம் கொடும்பாளூர் 4110-4

3. அந் நகரத்தினில் இருக்கும் வேளிர் குலத்து அரசு அளித்து 4111-1
மன்னிய பொன் அம்பலத்து மணி முகட்டில் பாக் கொங்கின் 4111-2
பன்னு துலைப் பசும் பொன்னால் பயில் பிழம்பாம் மிசை அணிந்த 4111-3
பொன் நெடும் தோள் ஆதித்தன் புகழ் மரபில் குடி முதலோர் 4111-4

4. இடம் கழியார் என உலகில் ஏறு பெரு நாமத்தார் 4112-1
அடங்கு அலர் முப்புரம் எரித்தார் அடித்தொண்டின் நெறி அன்றி 4112-2
முடங்கு நெறி கனவினிலும் உன்னாதார் எந்நாளும் 4112-3
தொடர்ந்த பெரும் காதலினால் தொண்டர் வேண்டிய செய்வார் 4112-4

5. சைவ நெறி வைதிகத்தின் தரும நெறியொடும் தழைப்ப 4113-1
மை வளரும் திருமிடற்றார் மன்னிய கோயில்கள் எங்கும் 4113-2
மெய் வழிபாட்டு அர்ச்சனைகள் விதிவழிமேல் மேல் விளங்க 4113-3
மொய் வளர் வண் புகழ் பெருக முறை புரியும் அந்நாளில் 4113-4

6. சங்கரன் தன் அடியாருக்கு அமுது அளிக்கும் தவம் உடையார் 4114-1
அங்கு ஒருவர் அடியவருக்கு அமுது ஒரு நாள் ஆக்க உடன் 4114-2
எங்கும் ஒரு செயல் காணாது எய்திய செய்தொழில் முட்டப் 4114-3
பொங்கி எழும் பெரு விருப்பால் புரியும் வினை தெரியாது 4114-4

7. அரசர் அவர் பண்டாரத்து அந்நாட்டின் நெல் கூட்டின் 4115-1
நிரை செறிந்த புரிபலவா நிலைக் கொட்ட காரத்தில் 4115-2
புரை செறி நல் இருளின் கண் புக்கு முகந்து எடுப்பவரை 4115-3
முரசு எறி காவலர் கண்டு பிடித்து அரசன் முன் கொணர்ந்தார் 4115-4

8. மெய்த்தவரைக் கண்டு இருக்கும் வேல் மன்னர் வினவுதலும் 4116-1
அத்தன் அடியாரை யான் அமுது செய்விப்பது முட்ட 4116-2
இத் தகைமை செய்தேன் என்று இயம்புதலும் மிக இரங்கிப் 4116-3
பத்தரை விட்டு இவர் அன்றோ பண்டாரம் எனக்கு என்பார் 4116-4

9. நிறை அழிந்த உள்ளத்தால் நெல் பண்டாரமும் அன்றிக் 4117-1
குறைவு இல் நிதிப் பண்டாரம் ஆன எலாம் கொள்ளை முகந்து 4117-2
இறைவன் அடியார் கவர்ந்து கொள்க என எம்மருங்கும் 4117-3
பறை அறைப் பண்ணுவித்தார் படைத்த நிதிப்பயன் கொள்வார் 4117-4

10. எணில் பெரும் பண்டாரம் ஈசன் அடியார் கொள்ள 4118-1
உள் நிறைந்த அன்பினால் உறு கொள்ளை மிக ஊட்டித் 4118-2
தண் அளியால் நெடும் காலம் திருநீற்றின் நெறி தழைப்ப 4118-3
மண்ணில் அருள் புரிந்து இறைவர் மலர் அடியின் நிழல் சேர்ந்தார் 4118-4

11. மை தழையும் மணி மிடற்றார் வழித்தொண்டின் வழிபாட்டில் 4119-1
எய்து பெரும் சிறப்பு உடைய இடங்கழியார் கழல் வணங்கி 4119-2
மெய் தருவார் நெறி அன்றி வேறு ஒன்றும் மேல் அறியாச் 4119-3
செய்தவராம் செருத்துணையார் திருத்தொண்டின் செயல் மொழிவாம் 4119-4

55 செருத்துணை நாயனார் புராணம்

1. உள்ளும் புறம்பும் குலமரபின் ஒழுக்கம் வழுக்கா ஒருமை நெறி 4120-1
கொள்ளும் இயல்பில் குடி முதலோர் மலிந்த செல்வக் குலபதி ஆம் 4120-2
தெள்ளும் திரைகள் மதகு தொறும் சேலும் கயலும் செழுமணியும் 4120-3
தள்ளும் பொன்னி நீர் நாட்டு மருக நாட்டுத் தஞ்சாவூர் 4120-4

2. சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண் குடி முதல்வர் 4121-1
நீரின் மலிந்த செய்ய சடை நீற்றர் கூற்றின் நெஞ்சு இடித்த 4121-2
வேரி மலர்ந்த பூம் கழல் சூழ் மெய் அன்பு உடைய சைவர் எனப் 4121-3
பாரில் நிகழ்ந்த செருத் துணையார் பரவும் தொண்டின் நெறி நின்றார் 4121-4

3. ஆன அன்பர் திருவாரூர் ஆழித் தேர்வித்தகர் கோயில் 4122-1
ஞான முனிவர் இமையவர்கள் நெருங்கு நலம் சேர் முன்றிலின் உள் 4122-2
மான நிலவு திருப்பணிகள் செய்து காலங்களின் வணங்கிக் 4122-3
கூனல் இளவெண் பிறைமுடியார் தொண்டு பொலியக் குலவு நாள் 4122-4

4. உலகு நிகழ்ந்த பல்லவர் கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி 4123-1
நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்தது ஒரு 4123-2
மலரை எடுத்து மோந்ததற்கு வந்து பொறாமை வழித் தொண்டர் 4123-3
இலகு சுடர்வாய்க் கருவி எடுத்து எழுந்த வேகத்தால் எய்தி 4123-4

5. கடிது முற்றி மற்று அவள் தன் கருமென் கூந்தல் பிடித்து ஈர்த்து 4124-1
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றி பரமர் செய்ய சடை 4124-2
முடியில் ஏறும் திருப்பூம் மண்டபத்து மலர் மோந்திடும் மூக்கைத் 4124-3
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர் 4124-4

6. அடுத்த திருத் தொண்டு உலகு அறியச் செய்த அடல் ஏறு அனையவர்தாம் 4125-1
தொடுத்த தாமம் மலர் இதழி முடியார் அடிமைத் தொண்டு கடல் 4125-2
உடுத்த உலகில் நிகழச் செய்து உய்ய செய்ய பொன் மன்றுள் 4125-3
எடுத்த பாத நிழல் அடைந்தே இறவா இன்பம் எய்தினார் 4125-4

7. செம் கண் விடையார் திருமுன்றில் விழுந்த திருப்பள்ளித் தாமம் 4126-1
அம் கண் எடுத்து மோந்த அதற்கு அரசன் உரிமைப் பெருந்தேவி 4126-2
துங்க மணி மூக்கு அரிந்த செருத் துணையார் தூய கழல் இறைஞ்சி 4126-3
எங்கும் நிகழ்ந்த புகழ்த்துணையார் உரிமை அடிமை எடுத்து உரைப்பாம் 4126-4

56 புகழ்த்துணை நாயனார் புராணம்

1. செருவிலிபுத்தூர் மன்னும் சிவ மறையோர் திருக்குலத்தார் 4127-1
அருவரை வில்லாளி தனக்கு அகத்து அடிமையாம் அதனுக்கு 4127-2
ஒருவர் தமை நிகர் இல்லார் உலகத்துப் பரந்து ஓங்கிப் 4127-3
பொருவரிய புகழ் நீடு புகழ்த்துணையார் எனும் பெயரார் 4127-4

2. தம் கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடு நாள் 4128-1
பொங்கு ஓத ஞாலத்து வற்கடமாய்ப் பசி புரிந்தும் 4128-2
எம் கோமான் தனை விடுவேன் அல்லேன் என்று இராப் பகலும் 4128-3
கொங்கார் பன் மலர் கொண்டு குளிர் புனல் கொண்டு அர்ச்சிப்பார் 4128-4

3. மால் அயனுக்கு அரியானை மஞ்சனம் ஆட்டும் பொழுது 4129-1
சால உறு பசிப்பிணியால் வருந்தி நிலை தளர்வு எய்திக் 4129-2
கோல நிறை புனல் தாங்கு குடம் தாங்க மாட்டாமை 4129-3
ஆலம் அணி கண்டத்தார் முடி மீது வீழ்த்து அயர்வார் 4129-4

4. சங்கரன் தன் அருளால் ஓர் துயில் வந்து தமை அடைய 4130-1
அம் கணனும் களவின்கண் அருள் புரிவான் அருந்தும் உணவு 4130-2
மங்கிய நாள் கழிவு அளவும் வைப்பது நித்தமும் ஒரு காசு 4130-3
இங்கு உனக்கு நாம் என்ன இடர் நீங்கி எழுந்திருந்தார் 4130-4

5. பெற்றம் உகந்து ஏறுவார் பீடத்தின் கீழ் ஒரு காசு 4131-1
அற்றம் அடங்கிட அளிப்ப அன்பரும் மற்று அது கைக்கொண்டு 4131-2
உற்ற பெரும் பசி அதனால் உணங்கும் உடம்பு உடன் உவந்து 4131-3
முற்றும் உணர்வு தலை நிரம்ப முகம் மலர்ந்து களி கூர்ந்தார் 4131-4

6. அந்நாள் போல் எந்நாளும் அளித்த காசு அது கொண்டே 4132-1
இன்னாத பசிப் பிணி வந்து இறுத்த நாள் நீங்கிய பின் 4132-2
மின் ஆர் செம் சடையார்க்கு மெய் அடிமைத்தொழில் செய்து 4132-3
பொன்னாட்டின் அமரர் தொழப் புனிதர் அடிநிழல் சேர்ந்தார் 4132-4

7. பந்து அணையும் மெல் விரலாள் பாகத்தார் திருப் பாதம் 4133-1
வந்து அணையும் மனத் துணையார் புகழ்த்துணையார் கழல் வாழ்த்தி 4133-2
சந்தம் அணியும் மணிப் புயத்துத் தனவீரர் ஆம் தலைவர் 4133-3
கொந்து அணையும் மலர் அலங்கல் கோட்புலியார் செயல் உரைப்பாம் 4133-4

57 கோட்புலி நாயனார் புராணம்

1. நலம் பெருகும் சோணாட்டு நாட்டி யத்தான் குடி வேளாண் 4134-1
குலம் பெருக வந்து உதித்தார் கோட்புலியார் எனும் பெயரார் 4134-2
தலம் பெருகும் புகழ் வளவர் தந்திரியராய் வேற்றுப் 4134-3
புலம் பெருகத் துயர் விளைவிப்பப் போர் விளைத்துப் புகழ் விளைவிப்பார் 4134-4

2. மன்னவன்பால் பெறும் சிறப்பின் வளம் எல்லாம் மதி அணியும் 4135-1
பிஞ்ஞகர் தம் கோயில் தொறும் திரு அமுதின் படிபெருகச் 4135-2
செந்நெல் மலைக் குவடு ஆகச் செய்து வரும் திருப்பணியே 4135-3
பல் நெடும் நாள் செய்து ஒழுகும் பாங்கு புரிந்து ஓங்கும் நாள் 4135-4

3. வேந்தன் ஏவலில் பகைஞர் வெம் முனைமேல் செல்கின்றார் 4136-1
பாந்தள் பூண் என அணிந்தார் தமக்கு அமுது படியாக 4136-2
ஏந்தலார் தாம் எய்தும் அளவும் வேண்டும் செந்நெல் 4136-3
வாய்ந்த கூடு அவை கட்டி வழிக் கொள்வார் மொழிகின்றார் 4136-4

4. தம் தமர்கள் ஆயினார் தமக்கு எல்லாம் தனித்தனியே 4137-1
எந்தையார்க்கு அமுது படிக்கு ஏற்றிய நெல் இவை அழிக்க 4137-2
சிந்தை ஆற்றா நினைவார் திருவிரையாக் கலி என்று 4137-3
வந்தனையால் உரைத்து அகன்றார் மன்னவன் மாற்றார் முனைமேல் 4137-4

5. மற்று அவர் தாம் போயின பின் சில நாளில் வற்காலம் 4138-1
உற்றலும் அச் சுற்றத்தார் உணவு இன்றி இறப்ப அதனில் 4138-2
பெற்றம் உயர்த்தவர் அமுது படி கொண்டாகிலும் பிழைத்துக் 4138-3
குற்றம் அறப் பின் கொடுப்போம் எனக் கூடு குலைத்து அழித்தார் 4138-4

6. மன்னவன் தன் தெம் முனையில் வினை வாய்த்து மற்று அவன்பால் 4139-1
நல் நிதியின் குவை பெற்ற நாட்டியத்தான் குடித்தலைவர் 4139-2
அந்நாளில் தமர் செய்த பிழை அறிந்தது அறியாமே 4139-3
துன்னினார் சுற்றம் எலாம் துணிப்பன் எனும் துணிவினர் ஆய் 4139-4

7. எதிர் கொண்ட தமர்க்கு எல்லாம் இனிய மொழி பல மொழிந்து 4140-1
மதி தங்கு சுடர் மணி மாளிகையின் கண் வந்து அணைந்து 4140-2
பதி கொண்ட சுற்றத் தார்க்கு எல்லாம் பைந் துகில் நிதியம் 4140-3
அதிகம் தந்து அளிப்ப அதனுக்கு அழைமின்கள் என்று உரைத்து 4140-4

8. எல்லாரும் புகுந்த அதன்பின் இருநியம் அளிப்பார் போல் 4141-1
நல்லார்தம் பேரோன் முன் கடை காக்க நாதன் தன் 4141-2
வல் ஆணை மறுத்து அமுதுபடி அழைத்த மறக்கிளையைக் 4141-3
கொல்லாதே விடுவேனோ எனக் கனன்று கொலைபுரிவார் 4141-4

9. தந்தையார் தாயார் மற்று உடன் பிறந்தார் தாரங்கள் 4142-1
பந்தம் ஆர் சுற்றத்தார் பதி அடியார் மதி அணியும் 4142-2
எந்தையார் திருப்படி மற்று உண்ண இசைந்தார் களையும் 4142-3
சிந்த வாள் கொடு துணிந்தார் தீய வினைப் பவம் துணிப்பார் 4142-4

10. பின் அங்குப் பிழைத்த ஒரு பிள்ளையைத் தம் பெயரோன் அவ் 4143-1
வன்னம் துய்த்து இலது குடிக்கு ஒரு புதல்வன் அருளும் என 4143-2
இந்நெல் உண்டாள் முலைப்பால் உண்டது என எடுத்து எறிந்து 4143-3
மின் அல்ல வடிவாளால் இரு துணியாய் விழ ஏற்றார் 4143-4

11. அந் நிலையே சிவபெருமான் அன்பர் எதிர் வெளியே நின்று 4144-1

உன்னுடைய கை வாளால் உறுபாசம் அறுத்த கிளை 4144-2
பொன் உலகின் மேல் உலகம் புக்கு அணையப் புகழோய் நீ 4144-3
இந்நிலை நம் உடன் அணைக என்றே எழுந்து அருளினார் 4144-4

12. அத்தனாய் அன்னையாய் ஆர் உயிராய் அமிர்தம் ஆகி 4145-1
முத்தனாம் முதல்வன் தாள் அடைந்து கிளை முதல் தடிந்த 4145-2
கொத்து அலர் தார்க் கோட்புலியார் அடிவணங்கிக் கூட்டத்தில் 4145-3
பத்தர் ஆய் பணிவார் தம் பரிசினையாம் பகருவாம் 4145-4

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி
1. மேவ அரிய பெரும் தவம் யான் முன்பு விளைத்தன என்னோ 4146-1
ஆவதும் ஓர்பொருள் அல்லா என் மனத்தும் அன்றியே 4146-2
நாவலர் காவலர் பெருகு நதி கிழிய வழி நடந்த 4146-3
சேவடிப் போது எப்போதும் சென்னியினும் மலர்ந்தன ஆல் 4146-4

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page